Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 04 விலை ரூபா: 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM PEOPLES DAILY மக்கள் தினசரி

நாதம்: 02 மார்ச் (15-03-1991) வெள்ளிக்கிழமை ஓசை 25

## விசேட பரீட்சை வினாத்தாள் வழமைபோல் அமையும்

(கொழும்பு)

க. பொ. த. (உயர்தரம்) விசேட பரீட்சைக்கான வினாத்தாள்கள் வழமைப்பிரகாரம் அமையுமென்று கொழும்பில் பரீட்சைப்பகுதி அறிவித்துள்ளது. 1990 ஆம் ஆண்டு க. பொ. த. (உயர்தரம்) பரீட்சைப் பிரமாணங்களுக்கு அமையவே விசேட பரீட்சையும் அமையும்; சென்ற ஆண்டு விண்ணப்பங்களை அனுப்பியிருந்தும் பரீட்சைக்குத் தோற்ற முடியா (4 ஆம் பக்கம் பார்க்க)

### சட்டமுறையைப் பின்பற்றாமல்

# இலங்கைத் தமிழர் எவரையும் காவலில் வைக்கக் கூடாது

## சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பு

(சென்னை)

இந்திய அரசின் சட்ட திட்டங்களைப் பின்பற்றாமல், வெளிநாட்டவர் எவரையும் கைது செய்து காவலில் வைக்கக் கூடாது என இலங்கைத்தமிழர் ஒருவர் மீதான ஆட்கொணர்வு மனு மீது சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது.

இந்திய அரசியல் சட்டத்தில் வெளிநாட்டு தனிநபர் சுதந்திரத்துக்கும் உறுதியளிக்கப்பட்டிருப்பதால், சட்ட நடைமுறைகளையும் பின் பற்றாமல் எந்த இலங்கைத் தமிழரையும் காவலில் வைக்கக் கூடாது என்று சென்னை உயர் நீதி மன்றம் நேற்று ஆட்கொணர்வு மனு ஒன்றின்மீது தீர்ப்பு வழங்கையில் தெரிவித்தது.

இந்தியப் பிரஜையாக இருந்தாலும், வெளிநாட்டவர்களாக இருந்தாலும் ஒவ்வொருவரது உயிருக்கும், தனிநபர் (4ஆம் பக்கம் பார்க்க)

### அகதிகளுக்கென தமிழக அரசு பதினெட்டரைக்கோடி செலவு

(சென்னை)

தமிழகத்தில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளின் மறுவாழ்வுப் பணிகளுக்காக மாநில அரசாங்கம் பதினெட்டரைக்கோடி ரூபாய் செலவழித்துள்ளது என்று தமிழக புனர்வாழ்வுத்துறை ஆணையாளர் கி. என். ராமிநாதன் தெரிவித்துள்ளார்.

இவர்களுக்கு செலவழித்த பதினெட்டரைக்கோடி ரூபாவில் பதினைந்துகோடி ரூபாவினை மத்திய அரசாங்கம் (4ஆம் பக்கம் பார்க்க)

### உள்ளூராட்சித் தேர்தலில் எதிர்க்கட்சிகள் கூட்டு

(கொழும்பு)

சுதந்திரக் கட்சி தலைமையில் எதிர்க்கட்சிகள் கூட்டுச் சேர்ந்து உள்ளூராட்சித் தேர்தல்களில் பங்கு கொள்ள இருப்பதாக கொழும்பிலிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

சுதந்திரக் கட்சியுடன் கம்யூனிஸ்ட் கட்சி, நவசமசமாஜக் கட்சி, சௌஜன சுதந்திரக் கட்சி, தேச விடுதலை மக்கள் கட்சி ஆகியன இம் முன்னணியில் இணைய இருக்கின்றன. புதிய சமசமாஜக் கட்சி (4ஆம் பக்கம் பார்க்க)

### மடுத்திருப்பதி அகதிகளை வெளியேற்றும் முயற்சி கைவிடப்பட்டுள்ளது

(கொழும்பு)

மடுக் கோவிலையும், அதனைச் சூழவுள்ள பகுதிகளில் இருந்தும் மக்களை இடம் பெயரச் செய்ய பாதுகாப்பு அமைச்சு எடுத்த முயற்சிகள் கைவிட்டிருப்பதாக வாராந்த செய்தியாளர் மாநாட்டில் சிறில் ரணதுங்கா

ஜெனரல் சிறில் ரணதுங்கா கூறினார்.

மேலும் அவர் கூறுகையில் சாதாரண பொதுமக்கள் உயிரிழப்பைத் தடுக்கும் வகை (4 ஆம் பக்கம் பார்க்க)

### இடாச்சூரியில் இருவர் காயம்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் இடாச்சூரி என்ற இடத்தில் சிறிலங்கா விமானப் படையின் குண்டுவீச்சு விமானங்கள் கடந்த 12ஆம் திகதி தாக்குதல் நடாத்தியதில் கலா (வயது 22), பிறேமாவதி (வயது 28) ஆகிய இரு பெண்களும் காயமடைந்தனர். (இ)

### மடுத்திருப்பதிக்கு அருகில் தாக்குதல்கள் வேண்டாம்

#### சிறிலங்காவிடம் இந்தியா கோரிக்கை

(டில்லி)

இலங்கையின் வட பகுதியில் ஆயிரக்கணக்கான தமிழ் அகதிகள் தங்கியுள்ள மடு தேவாலயத்திற்கு அருகேயுள்ள இடங்களில் உள்ள தமிழ்ப் போராளிகளின் முகாம்கள் மீது இராணுவத் தாக்குதல் நடத்த விருப்பதை கைவிட வேண்டுமென சிறிலங்கா அரசாங்கத்தை இந்திய அரசாங்கம் வலியுறுத்திக் கேட்டுள்ளது.

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் என். எம். ஜா சிறி (4ஆம் பக்கம் பார்க்க)

### இன்று பதிவு செய்யவும்

(யாழ்ப்பாணம்)

வானொலி நாடகப் பயிற்சிக் கருத்தரங்கில் கலந்து கொள்ள ஆர்வமுடையவர்கள் இன்று மாலை 6.00 மணிக்கு பிந்தாமல் தமது பெயர்களை நிதர்சனம்நிறுவலகத்தில் பதிவு செய்யுமாறு வேண்டப்படுகின்றனர். நிதர்சனம் நிறுவனம் இப்பயிற்சிக் கருத்தரங்கை நடத்துகின்றது.

### தோப்பூரில் தமிழர் கைது; மூவர் முகாமில் சுட்டுக்கொலை

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் அப்பாவிப் பொதுமக்கள் பலரை கைதுசெய்து மூன்றுபேரைக் கொலை செய்துள்ளனர்.

கடந்த இரண்டாம் திகதி தோப்பூரில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் அ. விஜயராஜா (வயது 31) என்பவரைக் கைதுசெய்து முகாமில் தடுத்து வைத்தனர். இவரை கடந்த 7ஆம் திகதி முகாமில் வைத்து சுட்டுக் கொலைசெய்தனர்.

கடந்த 9 ஆம் திகதி பள்ளிக்குடியிருப்பு வீதி வழியாகச் (4ஆம் பக்கம் பார்க்க)

### குடும்பப் பெண் காயம்

(மல்லாகம்)

கட்டுவனில் நிலைகொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் மல்லாகம், தெல்லிப்பளை ஆகிய பகுதிகளை நோக்கி சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒருவர் காயமடைந்துள்ளார். (4ஆம் பக்கம் பார்க்க)

### ஜெனரல் ரஞ்சனின் கொலைக்கு ஜே. வி. பிக்கோ, கசினோகாரருக்கோ தொடர்பு எதுவுமில்லை - ஜெனரல் சிறில்ரணதுங்க

(கொழும்பு)

அமைச்சர் ரஞ்சன் விஜேரட்னா கொலையுண்ட குண்டு வெடிப்புச் சம்பவத்துடன் ஜே.வி.பியினருக்கோ அல்லது நாடு கடத்தப்பட்ட கசினோகாரர்களுக்கோ எந்தத் தொடர்பும் இல்லையெனப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில்ரணதுங்கா தெரிவித்தார்.

கொழும்பில் வாராந்தச் செய்தியாளர் மாநாட்டில் அவர்மேலும் தெரிவிக்கையில் விடுதலைப் புலிகள் இயக்கத்தினரே மேற்படி சம்பவத்திற்குப் பொறுப்பு எனத் தாம் நம்புவதாகவும், புலனாய்வு அறிக்கைகள் இதனைத் தெளிவுபடுத்துவதாகவும் கூறினார். ஜெனரல் சிறில்ரணதுங்காவின் கூற்றை ஏற்றுக் கொண்ட அமைச்சரவைப் (4ஆம் பக்கம் பார்க்க)

### தனிநாட்டுக் கோரிக்கையை புலிகள் இன்னும் கைவிடவில்லை - பிரட்மன் வீரக்கோன்

(கொழும்பு)

அரசாங்க சார்பற்ற நிறுவனமொன்றின் உறுப்பினரான லோரன்ஸ் திலகர் என்பவருடன் உத்தியோகப்பற்றற்ற முறையில் பேசப்பட்டது என்று சிறிலங்கா ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் கூறியுள்ளார். (4ஆம் பக்கம் பார்க்க)

### வவுனியாவில் இராணுவத்தால் முதியவர் சுட்டுக் கொலை; வேறொருவரைக் காணவில்லை

(வவுனியா)

சிறிலங்கா இராணுவத்தினரால் முதியவர் ஒருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டு அவரது சடலம் எரியூட்டப்பட்டது.

சில தினங்களுக்கு முன்னர் வவுனியா - மன்னார் வீதியில் உள்ள வேப்பங்குளம் பகுதியில் இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

மேற்படி பகுதியில் உள்ள திலகா அரிசி ஆலையில் சமையல் வேலை செய்த சாமி என அழைக்கப்படும் எழுபது வயது முதியவர் அருகில் உள்ள வீட்டில் தங்கியிருந்த சமயம் அங்கு சென்ற இராணுவத்தினர் அம் முதியவரை (4ஆம் பக்கம் பார்க்க)

### மீனவர் மீது ஹெலி தாக்கு ஒருவர் காயம்

(செ. த; மை)

வல்வெட்டித்துறை ஊறணி கடல் பகுதியில் படகில் மீன் பிடித்துக் கொண்டிருந்தமூவர் மீது ஹெலி ஒன்று தாக்குதல் மேற்கொண்டதில், இ. ரவீந்திரன் (30 வயது) காயம (4ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

1. வர்த்தகத்தில் பேராசிரியர்
2. வியாபார நிருவாகத்தில் பேராசிரியர்
3. வர்த்தகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர் - தரம் 1
4. வியாபார நிருவாகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 1
5. புவியியலில் உதவி விரிவுரையாளர்

துறைத்தலைவரினால் ஓராண்டுச் சேவையைத் திருப்திகரமாக நிறைவுசெய்துள்ளாரென அத்தாட்சிப் படுத்தப்பட்ட உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்) ஒருவரைப் பீடாதிபதி விரிவுரையாளர் (தகுதிகாண்) என்ற பதவிப்பெயரில் நியமிக்கலாம் என்பதுடன் துணைவேந்தர், அவரை ரூபா 4500—10×200 — 6500 (மாதமொன்றுக்கு) சம்பள அளவுத்திட்டத்தில் வைக்க முடியும்.

**சம்பள அளவுத்திட்டம்**

பேராசிரியர்: ரூபா 12,200—6×300—14,000/- (மாதமொன்றுக்கு)

சிரேஷ்ட விரிவுரையாளர்: ரூபா 9,600—8×250 தரம் 1 —11,600/- (மாதமொன்றுக்கு)

உதவி விரிவுரையாளர்: ரூபா 3,900/- மாதமொன்றுக்கு (நிலையானது) ஆண்டு ஒன்றுக்கு

பேராசிரியர் பதவிகளுக்கும், சிரேஷ்ட விரிவுரையாளர் பதவிகளுக்கும் விண்ணப்ப முடிவுத் தேதி 1991-06-03 ஆகும். ஏனைய பதவிகளுக்கு முடிவுத் தேதி 1991-05-02 ஆகும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தாபனக்கிளையின் சிரேஷ்ட உதவிப்பதிவாளரின் அலுவலகத்தில் கிடைக்கக்கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பப்படிவங்களுக்கான வேண்டுகோளுடன் சுயமுகவரியிட்டு ரூபா 2/- முத்திரை ஒட்டப்பட்ட 23×10 ச.மீ. அளவுடைய கடித உறையும் ஏனைய பதவிகளுக்கு சுயமுகவரியிட்டு முத்திரை ஒட்டப்பட்ட 23×10 ச.மீ அளவுடைய கடித உறையும் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.

அரச திணைக்களங்கள், அரசகூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தனித்தனி விண்ணப்பங்கள் அனுப்புதல் வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்களின் சிறப்புத் தகைமைகளையும்/அல்லது அனுபவத்தையும் கவனத்தில் கொண்டு சம்பள அளவுத்திட்டத்தின் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

குறிப்பு: பேராசிரியர் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையிலான நியமனமும் கவனிக்கப்படும்.

பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1991-03-08. (B/ 2137)

---

**வரிவிளம்பரம்**

### தாதியர் தேவை

விரைவில் ஆரம்பிக்கவுள்ள வைத்தியசலைக்கு அனுபவமுள்ள தாதியர் உடன் தேவை நேரில் வரவும். டாக்டர் தணிகாசலம் 16, இலந்தைக்குளம் வீதி, கொழும்புத்துறை. (R - 1184)

### தவறி விட்டது

பெப்ரவரி முதல் வாரத்தில் வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் வந்த ஒருவர் தன் இரு கைப்பைகளைத் தவறவிட்டு விட்டார். புடைவைகள், குழந்தைகளுக்குரிய புதிய உடைகள், பிறநாட்டுக் கடிதங்கள், படங்கள், நான்கு இரும்புத்திறப்புக்கள் இருந்தன. கடிதங்கள், படங்கள் திறப்புக்களையாவது எடுத்தவர்கள் திரு இராஜலிங்கம் இளைப்பாறிய தபாலதிபர், தாண்டிக்குளத்தில் கொடுக்கவும். சன்மானம் வழங்கப்படும். (R-1175)

### கொழும்பு ஸ்ரூடியோ

புளொக் (Block) புகைப்படம், றபர்சீல், கலர்படம் ஒவியம் பிறேம் போடுதல், கலர் பிலிம், அருள்கள், ஸ்கிக்கேஸ் முதலியவைகளுக்கு நாடுங்கள்: கொழும்பு ஸ்ரூடியோ யாழ்ப்பாணம். (B - 2090)

### அம்மன் கோயிலில் திருட்டு

(செ. த. மை.)

இருபாலை மேற்கு கட்டப்பிராய் முத்துமாரியம்மன் ஆலயத்தில் 2 லட்சம் ரூபா பெறுமதியான நகைகளும், பொருள்களும் களவாடப்பட்டுள்ளன.

கடந்த செவ்வாய் இரவு ஆலயத்தின் கதவுகளைப் பிரித்து உள்புகுந்த திருடர்கள் அம்மனின் நகைகள், சில்வர்ப் பாத்திரங்கள் ஆகியவற்றை திருடியுள்ளனர். விக்கிரகங்கள் பெயர்த்தெடுக்கப்பட்டு, இயந்திரத் தகடுகளும் திருடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### கும்பாபிஷேகம்

(புங்குடுதீவு)

எதிர்வரும் (25-3-91) திங்கட்கிழமை புங்குடுதீவு மேற்கு பெருங்காடு கிராஞ்சியம்பதி ஸ்ரீமீனாட்சியம்பாள் சமேத சோமசுந்தரேஸ்வர சுவாமி திருக்கோயில் மகாகும்பாபிஷேகம் காலை 9-06 மணி முதல் 10-48 மணிவரையும் நடைபெறவுள்ளது. அன்றிரவு திருக்கல்யாணமும் பஞ்சமூர்த்திகள் வீதியுலாவும் இடம் பெறும்.

---

## கம்பியூட்டர் கல்வி

**Diploma in Data Processing And Computer Programming In Basic Language**

ஆரம்பம்: 15-3-1991 — 9.00 a.m (திங்கள், புதன், வெள்ளி வகுப்புகள்)

16-3-1991 — 9.00 a m (சனி, ஞாயிறு வகுப்புகள்)

O/L படித்த இருபாலாரும் சேரலாம். சேரும் போது செலுத்த வேண்டியது 500/- மட்டுமே

மேலதிக விபரங்களுக்கு:

# UNIKCO COMPUTER CENTRE

**NO. 37, Clock Tower Road, JAFFNA.**

(வெலிங்டன் சந்திக்கு வடக்குப் பக்கமாக உள்ள மேல்மாடி)

(B-2132)

---

## மில்க்வைற் திரவ சவர்க்காரம்

சகல தேவை அழுக்கு நீக்கி

**Milk White Liquid Soap**

**All Purpose Dirt Remover**

சாதாரண வீட்டுச் சலவைக்கு பாவிக்கும் முறை

1. ஒரு லீற்றர் நீரில பத்து மேசைக்கரண்டி மில்க்வைற் திரவ சவர்க்காரத்தை ஊற்றவும்.
2. நுரை செறிந்த நீரைக் கலக்கவும்.
3. கலவையுள் ஈரத் துணியை அமிழ்த்திக் கலவையை துணியில் செறியச் செய்யவும்.
4. பத்து நிமிடத்தில் துணியைச் சுத்த நீரில் நன்றாக அலசி எடுக்கவும்.
5. சலவை செய்யும் துணிகளின் எண்ணிக்கைக்கும் பொலிவுக்கும் ஏற்ப அளவில் மாற்றஞ் செய்யவும்.

மாவட்டத்தில் சகல ப. நோ. கூ. சங்கங்களிலும் கடைகளிலும் விற்பனையாகிறது. (B/2133)

1 போத்தல் ரூ. 90/- 1/2 போத்தல் ரூ. 45/-

---

## நினைவு கூருகின்றோம்

## மார்ச் 15

1988ஆம் ஆண்டு சுகயீனம் காரணமாக மரணித்த

**ரெயில்** (குகராசா சரவணபவான் - மூன்று முறிப்பு, வவுனியா)

இதே ஆண்டு திருமலையில் வீரமரணமடைந்த

**நவம்** (இரத்தினம் குகராசா - திரியாய்)

**மூர்த்தி** (செல்லையா ஜீவராசா - தியாகம்)

1989ஆம் ஆண்டு அலம்பிலில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரமரணமடைந்த

**ரமேஸ்** (ஆ. பாலநாதன் - குமுழமுனை)

**2ஆம்லெப். விக்ரம்** (கிருஷ்ணபிள்ளை சவுந்தரபிள்ளை-முல்லைத்தீவு)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

- விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

**ஒரு திருத்தம்**

★ நேற்று வெளிவந்த நினைவு கூருகின்றோம் விளம்பரத்தில் கப்டன் வாதவூரனுக்கு அடுத்ததாக குறிப்பிடப்பட்டிருக்கும் போராளிகள் ஜேக்கப், முஸ்தபா, பரமேஸ், சாந்தன், சாள்ஸ், பிறேம் அல்லது பிரதாப். நவநீதன் ஆகிய போராளிகள் அனைவரும் 1989 ஆம் ஆண்டு மார்ச் 14ஆம் திகதி வீரமரணமடைந்தவர்களாவர். ஆனால் தவறுதலாக 1988 ஆம் ஆண்டு வீரமரணமடைந்த போராளிகள் வரிசையில் இவர்களது பெயர் இடம்பெற்று விட்டது.

(B-2142)

---

## 6ஆம் மாத கண்ணீர் அஞ்சலி



## கப்டன் ஹீரோராஜ்

**(ச. பிரபாகரன்)**

அச்செழு, நீர்வேலி.

தாயின் மடியில்: 22—10—1966

அரக்கன் பிடியில்: 15—09—1990

நாட்டின் விடுதலைக்கு நமதுயிரை
நாம் அளிக்க வேண்டுமெனின்
நாட்டினிலே புரிகின்ற வேட்டைபோல்
காடையர் செய்கின்ற பாதகத்தை
பட்டெனவே பாய்ந்து சென்று
பாசறையிலே போட்டெரிக்கப்
போராட்டம் நடத்தியொரு
புதிய மண்ணை அமைத்திடுவோம்.

— ஹீரோராஜ்

நாம் என்றும் மறவாத நல்லிசை பணவே!
உன் இலட்சியம் நிறைவேறும்
காலம் அந்தக் காட்சியினைக் காட்டும்.

(B: 2140) பெற்றோர், உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

❀ சிந்தனைக்கு ❀

அடகு வைத்த நிலங்களை மீட்கலாம், ஆனால் கண்ணியத்தை அடகு வைத்தால், அதை மீட்கவே இயலாது.

— கால்வேர்ஸ் மிஷல்ட்டன்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 15-03-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 023-2839 நிர்வாகபீடம்: 2208
உ.பெ.எண் 05

# தமிழர் விவகாரம் மீண்டும் சந்தைக்கு

இந்திய மக்களவையான லோக்சபா கலைக்கப்பட்டு விட்டது. பிறக்கும் போதே நோயுடன் பிறந்த ஒன்பதாவது லோக்சபா குறைந்த காலத்திலேயே எதிர்பார்த்த படியே மரணித்துவிட்டது. பலவாதங்கள் குற்றச்சாட்டுக்கிடையே லோக்சபா முடிவு நேற்றுமுன்தினம் நண்பகல் ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமனின் அறிவித்தலுடன் நிகழ்ந்தது. பல வாரங்கள் நீடித்த அரசியல் நெருக்கடியும் குழப்பமும் தற்காலிகமாகத் தீர்க்கப்பட்டுள்ளன. இந்திய அரசியற்கட்சிகளும், மக்களும் புதியதொரு தேர்தலை எதிர்கொள்ளத் தயாராகி வருகின்றார்கள்.

லோக்சபா கலைப்பை சகல அரசியற்கட்சிகளும் வரவேற்றாலும் ஒவ்வொரு அரசியற்கட்சியும் தமது எதிர்காலம் குறித்து திடமான நம்பிக்கை கொண்டிருக்கவில்லை என அரசியல் அவதானிகள் கருதுகின்றார்கள். இந்த நிலையில் அரசியற்கட்சிகளுக்கு இடையில் புதிய கூட்டணிகள் அமைப்பதிலும் தொகுதி உடன்பாடு செய்வதிலும் தீவிரபேரங்கள் இடம் பெறத் தொடங்கிவிட்டன.

மேற் கூறப்பட்ட பேரங்கள் ஒருபுறத்தில் நடைபெற மறுபுறத்தில் தேர்தல் விஞ்ஞாபனம் தயாரிப்பதிலும், தேர்தல் பிரசாரத்தில் முதன்மைப்படுத்தப்படும் பிரச்சினைகள் தொடர்பாகவும் கட்சிகள் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றன. இந்நிலையில வாக்குகள் சம்பாதித்துத் தரக்கூடிய பிரச்சினைகளைக் கண்டறிவதும் அவற்றிற்கான உறுதி மொழியைக் கண்டறிவதும் அவர்களின் முக்கியபிரச்சினையாகியுள்ளது. அத்தோடு வாக்குகளை தேடித்தரக்கூடிய புதிய பிரச்சினைகளை எவ்வாறு உருவாக்குவது என்பது குறித்தும் சிந்தித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இந்த நிலையிலேயே தமிழ் நாட்டு அரசியல் கட்சிகளும் உள்ளன. தமிழ் நாட்டில லோக்சபாவிற்கான தேர்தலுடன் சட்டசபைக்கான தேர்தலும் நடைபெறலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. இந்நிலையில் தமிழ் நாட்டு பிராந்தியக் கட்சிகள் தேசிய கட்சிகளுடன் கூட்டணிகள் அமைப்பதிலும், பிராந்தியக் கட்சிகளுடன் உடன்பாடு காண்பதிலும தீவிரமாக ஈடுபட்டுவருகின்றன

இந்த நிலையில் இலங்கைத் தமிழர் விவகாரம் மீண்டும் ஒரு முறை இந்தியாவில் குறிப்பாக தமிழ் நாட்டில் முக்கிய விவகாரமாக இடம் பெறப்போகின்றது. ஆனால் 1983-ஆம் ஆண்டிற்கு பின்னர் நடந்த எல்லாத் தேர்தல்களிலும் இலங்கைத் தமிழர் விவகாரம் ஒரு குறிப்பிடக் கூடியவிடயமாக இருந்திருப்பினும் இம்முறை வேறுபட்ட சூழலில், வேறுபட்ட அணுகுமுறையில் இலங்கைத் தமிழர் விவகாரம் அணுகப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இம்முறை இலங்கைத் தமிழர் விவகாரம் முக்கிய இடம் பெறுவதற்கு, தி. மு. க. அரசாங்கம் இலங்கைத் தமிழர் விவகாரம்தொடர்பாகக் கலைக்கப்பட்டது முக்கிய காரணமாகும். அத்தோடு ஒன்றரை இலட்சத்திற்கு மேற்பட்ட அகதிகள் தமிழ் நாட்டில் உள்ளதுமாகும். இந்த நிலையில், தேர்தலில இலங்கைத் தமிழர் விவகாரத்தைக் குறிப்பிடப்படாமல்எவரும்இருக்கமுடியாது. இதேபோன்று தேசியக் கட்சிகளின் தேர்தல் விஞ்ஞாபனங்களிலும், பிரசாரங்களிலும் இலங்கைத் தமிழர் விவகாரத்தை சிறிலங்கா விவகாரம் என்பன இடம்பெறாமல் இருக்க முடியாது.

கடந்த காலங்களில் இலங்கைத் தமிழர் விவகாரம் தொடர்பாக இந்திய அரசியற்கட்சிகள் பேசிக்கொண்ட போதும் எந்தக் கட்சியும் தீர்வு எதையும் முன்வைக்கவில்லை. ஆனால் இம்முறை அரசியற்கட்சிகள் ஒவ்வொன்றும் இலங்கைத்தமிழர் தொடர்பாக தமது நிலையினை வெளிப்படுத்த வேண்டியுள்ளன. இதற்கு அவர்களின் கடந்த கால நடவடிக்கைகள் இன்று வற்புறுத்துகின்றன.

ஆனால் தேர்தல் என்று வந்துவிட்டால் இலங்கைத் தமிழர்பால் கரிசனையும், அக்கறையும் இந்திய அரசியற் கட்சிகளுக்கு ஏற்படுவது தவிர்க்க முடியாத அம்சமாகி விடும் கடந்த வருடம் கிழக்கிலங்கையில் ஆயிரக்கணக்கில் தமிழர் படுகொலை செய்யப்பட்ட போதும், மக்கள் பட்டினியால் மாண்ட போதும் ஏற்படாத கரிசனையும், இன உணர்வும் அரசியல்வாதிகளுக்கு இன்று ஏற்பட்டு இலங்கைத்தமிழருக்காக இரத்தக் கண்ணீர் வடிக்கவும் கூடும். இலங்கைத்தமிழர் தமிழ் நாட்டில் கைது செய்யப்பட்டது அவர்களின் பாதுகாப்புக்குத்தான் எனவும் கூறக்கூடும். இதற்குக் காந்தியின் வரலாற்றை ஆதாரமாகக் காட்டவும் முற்படலாம். அத்தோடு இன்று இலங்கையில் நடைபெறும் தமிழர் படுகொலைகளைக் கண்டிக்கவும், போரைநிறுத்துமாறும் அரசியற்கட்சிகள் "பொங்கி எழவும்" கூடும.

அதாவது இந்தியாவில் தேர்தல் வருகின்றது. இலங்கைத்தமிழர் விவகாரம் மீண்டும் ஒரு தடவை விற்பனைப் பண்டமாகப் பேசுகின்றது. சில வேளை அரசியல்வாதிகளின்/கட்சிகளின் தேவை கருதி இப் பண்டம் இலவசமாகக் கூட விநியோகிக்கப்படலாம்.

# கிழக்கில் தமிழரை அழித்துவிடும் நடவடிக்கைகள் தொடர்கின்றன

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் முஸ்லிம்களைஇ கிராமங்களை அண்மித்து இருந்த தமிழ்க் கிராமங்கள் அனைத்தும் முற்றாக அழிக்கப்பட்டு அக் கிராமங்களில் வசித்து வந்த தமிழ் மக்கள் அனைவரும் நிரந்தர அகதிகளாக்கப்பட்டுள்ளனர்.

## வீடுகள் அழிப்பு

ஆதில் சம்மாந்துறை, வீரமுனை, மல்வத்தை, வளத்தாப்பிட்டி, அட்டைப்பளம், வீரக்கேணி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 3000 க்கும் மேற்பட்ட மக்கள் காரைதீவு விபுலானந்த வித்தியாலயத்தில் அகதிகளாக உள்ளனர்.

இவர்களுக்கு அரசினால் வழங்கப்படும் வாராந்த உணவுப் பொருள்கள் மட்டுமே கிடைக்கின்றன. கடந்த ஜனவரி மாதம் இந்த முகாமுக்குள் அதிரடிப் படையினர் புகுந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் அரச சார்பற்ற நிறுவனங்கள் எந்தவித உதவியும் மேற்கொள்ளவில்லை.

பொத்துவில், கோமாரி, தாண்டியடி, தங்க வேலாயுதபுரம், அக்கரைப்பற்று, பனங்காடு, கோளாவில் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் திருக்கோயில், தம்பிலுவில் ஆகிய பகுதிகளில் அகதிகளாக உள்ளனர். பொத்துவிலில் உள்ள தமிழ் கிராமம் முஸ்லிம்களாலும், இராணுவத்தாலும் முற்றாக எரித்துப் பாரிய இயந்திரம் மூலம் அழிக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சத்துருக்கொண்டான், தன்னாமுனை, குடியிருப்பு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் மட்டக்களப்பு சிங்கள மகா வித்தியாலயத்திலும், அரசடி ப. நோ. கூ. சங்க கட்டடத்திலும் எருவூர், தலவாய், சவுக்கடி கிராம மக்கள் செங்கலடி தேவாலயத்திலும் முறக்கொட்டாஞ் சேனையில் முகாம் அமைக்கப்பட்டிருப்பதால் அக் கிராமத்து மக்கள் இருப்பதற்கு வீடுகள் இல்லாத நிலையில் சித்தாண்டி பாடசாலையின் மைதானத்திலும் அகதிகளாக உள்ளனர்.

13, 14, 35, 37, 39 ஆம் கொலனிகள, பாலையடிவெட்டை, மாவையர்கட்டு, கல்வெட்டை கிராமத்து மக்கள் மண்டூர் குருமன்வெளி உறவினர்களின் வீடுகளிலும் அகதிகளாக உள்ளனர். வாகரை கிராம மக்கள் உணவு, மருத்துவம் பற்றாக்குறை காரணமாக வாழைச்சேனைக்கு இடம் பெயர்ந்துள்ளனர்.

## உணவு விநியோகம்

அம்பாறை மாவட்டத்தில் அரசினால் அனைத்து மக்களுக்கும் பதினாறு வாரங்களுக்கான உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. மட்டக்களப்பிற்கு ஒன்பது வாரங்களுக்கும் வழங்குவதாக அறிவிக்கப்பட்ட போதும், ஆறு வாரங்களுக்கே வழங்கப்பட்டன.

வாகரை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நான்கு வாரங்களுக்கான உணவுப் பொருள்கள் மாத்திரமே வழங்கப்பட்டன. இதனால் இப்பகுதி மக்கள் மோசமான உணவு, மருத்துவ வசதியின்றி கஷ்டப்படுகின்றனர் 15. 12. 90க்குப் பின்னர் இப் பிரதேசங்களுக்கு உணவுப் பொருள்கள் எடுத்துச் செல்ல இராணுவம் அனுமதிக்கவில்லை. உணவின்றி மக்கள் காட்டில் உள்ள கருணைக் கிழங்கு, ஈச்சங்குருந்து என்பனவற்றை உண்டு வருகின்றனர். வேறு லர் வாழைச்சேனைப் பகுதிக்கு இடம் பெயர்ந்துள்ளனர். 11-02-91க்குப் பின்னர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் நேரடியாக இப் பிரதேசத்தை பார்வையிட்டதன் பின்னரே, வண்டில் மூலம் ஓரளவான உணவு விநியோகம் மேற் கொள்ளப்பட்டது.

## போக்குவரத்து வசதி

போக்குவரத்து வசதிகள் மட்டக்களப்பு, அம்பாறை பிரதான வீதியில் இராணுவச் சோதனைகளோடு ஓரளவு சீராக நடைபெற்றாலும் கிராமப் பகுதிகளுக்கும் வாவியை அண்டிய படுவான்கரை பகுதிகளுக்கும் எந்த விதமான போக்குவரத்து வசதிகளும் இல்லை. செங்கலடியில் இருந்து பதுளை வீதியில் வாகன போக்குவரத்திற்கு ராணுவத்தினர் தடைவிதித்திருப்பதால் புல்லுமலையில் இருந்து கால்நடையாகவும் ஈசுகிள் மூலமுமே மக்கள் செல்கின்றனர்.

வாகரை உ. அ. அ. பிரிவில் வாழைச்சேனையில் இருந்து வெருகல் கங்கைவரை எந்த வித வாகனங்களும் சேவையில் இல்லை. இப்பாதையில் இறால் ஓடைபாலம் காயாக்கேணி, பனிச்சங்கேணிபாலம் என்பன சேதமடைந்துள்ளதால் போக்குவரத்து செய்ய முடியாமல் உள்ளது.

## வைத்திய வசதி

அம்பாறை மாவட்டத்தில் வைத்திய வசதி சீராக இயங்கும் அதே நேரம் மட்டக்களப்பு மாவட்டத்தில் சீராக இடம் பெறவில்லை. வைத்தியர்கள் பற்றாக்குறையினாலும் போக்குவரத்து வசதியின்மையாலும்வைத்தியவசதி குறைவாக காணப்படுகிறது. வாரத்திற்கு ஒரு முறையே கிராமப் புறங்களுக்கான நடமாடும் வைத்திய சேவை அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் நடைபெறுகின்றன. வாகரை உ. அ. அ பிரிவிற்கு இந்த சேவை கூடநடைபெறுவதில்லை.

அண்மையில் இப் பிரதேசங்களில் ஏற்பட்ட வெள்ளத்தினால் அநேகமான மக்கள் மலேரியா, மூளைக்காய்ச்சல், வயிற்றோட்டம், வாந்திபேதி, கண்நோய் போன்ற நோய்களினால் பாதிக்கப்பட்டனர்.

தமிழ் ஆயுதக் குழுக்களின் அச்சுறுத்தல்களும், கடத்தல்களும் இடம் பெறுவதால் மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு வைத்தியர்களும ஊழியர்களும் கடமைக்குச் செல்ல அஞ்சுகிறார்கள். பொதுமக்களும் அவ்வாறே உள்ளனர்.

31. 1. 91 அன்று வயிற்றோட்ட நோயினால் பாதிக்கப்பட்ட மையிலவட்டுவான் நோயாளி ஆறுமுகம் பதமானந்தம் (வயது 30) சத்திரசிகிச்சைக்காக மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது மறுநாள் ரெலோ இயக்கத்தினரால் கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

## தமிழ் ஆயுதக் குழுக்கள்

1. 2. 91 செங்கலடியில் ரெலோ இயக்கத்தினரால் கருணப்பிள்ளை புலேந்திரன் (வயது 28 கொம்மாந்துறை) சுட்டுக் கொல்லப்பட்டார். 2-2-91 களுவாஞ்சிக் குடியில் ஆறுமுகம் ஜெகதீஸ்வரன் (வயது 28) வைரமுத்து பூபாலபிள்ளை (வயது 49 பழுகாமம் ப. நோ. கூ. சங்க சாரதி) இவரது மகன் பூபாலபிள்ளை ஜெகதீசன் (வயது 22 களுவாஞ்சிக்குடி) இவர்களை ரெலோ இயக்கத்தினர் இராணுவத்தினருடன் இணைந்து சுட்டுக் கொன்றனர். இதே நாள மணற்பிட்டி முகாமில் இராணுவம் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் வீதியால் சென்றபெண் ஒருவர் காயப்பட்டார். இவரது மகள் காயம் அடைந்தார்.

3. 2. 91 நிலாவணை இராணுவ முகாமில் 26. 1. 91 இல் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த 40 ஆம் கிராமத்தைச்சேர்ந்த இருவர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

6. 2. 91 நாவற்குடாவில் ராசேந்திரம் குமாரி, யோகேஸ்வரி (வயது 30) கிராம சேவகர் சிவமாலை ராஜேஸ்வரி (வயது 40) பிள்ளைகள் இருவர் ஆகியோர் புளொட் இயக்கத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

10. 2. 91 எருவில் கிராமத்தில் வீரகேசரி ராஜேந்திரன் (வயது 22) ரெலோ இயக்கத்தினர் இராணுவத்தினர் கூட்டு நடவடிக்கையின் சுட்டுக் கொல்லப்பட்டார்.

11. 2. 91 அக்கரைப்பற்று 1 ஆம் குறிச்சியில் விசேட அதிரடிப் படையினர் 8பொதுமக்களை சுட்டுக் கொன்றனர்.

12. 2. 91 கரையாக்கன்தீவு கிராமத்தை சுற்றி வளைத்த இராணுவத்தினர் 130பேரை கைது செய்து அதில் 12பேரை தடுத்துவைத்து அதில் இரண்டு பேரை சுட்டுக் கொன்றுள்ளனர். குமார் (வயது 29) இருதயபுரம், ராஜன் (வயது 25) வீச்சுக்கல்முனை ஆகிய இருவருமே கொல்லப்பட்டவர்கள் ஆவர். இதே தினம் கோட்டைக் கல்லாறில் நிலாவணை இராணுவத்தினர் 40 பேரை கைது செய்தனர்.

16. 2. 91 அன்று கருவாக்கேணியில் மீன் வியாபாரி இளையதம்பி செல்வராசா (வயது 40) அவரது பிள்ளைகள் நான்கு பேரையும் இராணுவத்தினர் சுட்டுக் கொன்று அவரிடம் இருந்த 11, 600 ரூபா பணத்தையும் ஒருமோதிரத்தையும் எடுத்துச் சென்றனர்.

## கலைஞர்களுக்கான கலந்துரையாடல்

(ஆரையம்பதி)

கலைஞர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4-00 மணிக்கு யாழ். கனகரத்தினம் மகாவித்தியாலயத்தில் நடைபெறும். கலை இலக்கிய ஆர்வமுள்ளவர்களை கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். இக் கலந்துரையாடலில் வலிகாமம் பிரதேசப் பொறுப்பாளரும், வலிகாமம் பிரிவு கலை கலாசாரப் பொறுப்பாளரும் கலந்து கொள்கின்றனர்.

## விசேட கூட்டம்

(கொழும்புத்துறை)

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் இலங்கைக் கிளையின் விசேட ஆட்சிக் குழுக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு இல 67, புகையிரத நிலைய வீதியில் உள்ள இயக்கப் பணி மனையில் தலைவர் திரு. பொன். பூலோகசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

அத்தருணம் "உலகத் தமிழர் குரல்" வெளியீட்டு வைபவமும் இடம் பெறவுள்ளது. (24) (32)

## நீதியான முறையில் தேர்தல்

(கொழும்பு)

"சுதந்திரமாகவும், நீதியான முறையிலும் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்த சகல பணிப்புரைகளும் விடுவிக்கப்பட்டுள்ளன" என்று சிறிலங்காவின் ஜனாதிபதி ஆர். பிரேமதாச அறிவித்துள்ளார்.

# தீண்டத்தகாத கட்சியாக நாம் எதையும் கருதவில்லை

**- சந்திரசேகர்**

(டில்லி)

தேர்தல் திகதி அட்டவணை இன்னமும் அறிவிக்கப்படாத நிலையில் அரசியல் கட்சிகள் தேர்தல் களத்தில் குதிப்பதற்கு தயாராகி வருகின்றன. எந்த ஒரு கட்சியையும் தீண்டத்தகாத கட்சியாக தாம் கருதவில்லை என்று ஜனதாதள (எஸ்) கூறியுள்ளது. இதே வேளை பாரதீய ஜனதாக் கட்சி சிவசேனையுடன் தான் தேர்தல் ஒப்பந்தம் மேற்கொள்ளப்போவதாகக் கூறியுள்ளது.

பாரதீய ஜனதாக் கட்சி சுமார் 450 தொகுதிகளில் போட்டியிடும் என்று எல். கே. அத்வானி கூறியுள்ளார்.

தேசிய முன்னணிக்கும் இடதுசாரிக் கட்சிகளுக்கும் தேர்தல் உடன்பாடு ஏற்பட்டுள்ளது. இவை தேர்தலில் கூட்டுச் சேர்ந்து போட்டியிடுவது என்று முடிவு செய்துள்ளன. தேர்தல் தொகுதிப் பங்கீடு பற்றிய ஆரம்ப ஆலோசனைகளை அவை தொடங்கியுள்ளன.

அடுத்த மாதம் முதல் வாரத்தில் தேர்தலுக்கான திகதிகள் அறிவிக்கப்படலாம். வாக்குப் பதிவுக்கு ஆறு வாரங்களுக்கு முன்பு திகதிகளை அறிவிப்பது இந்தியாவில் தேர்தல் கமிஷனின் மரபாகும்.

## இந்தியா மொத்த வாக்காளர் 52கோடி 10லட். என அறிவிப்பு

(டில்லி)

இந்தியாவில் மொத்த வாக்காளர் எண்ணிக்கை 52 கோடியே 10 லட்சம் என தேர்தல் ஆணைக்குழுவினால் கணக்கிடப்பட்டுள்ளது.

மே மாத நடுப்பகுதியில் மக்களவைத் தேர்தலை நடத்த முடியும் என்று சட்டம் ஒழுங்கு உட்பட எல்லா அம்சங்களையும் ஆராய்ந்த பின்னர் தலைமைத் தேர்தல் ஆணையாளர் டி.என். ஷேஷன் தெரிவித்துள்ளார்.

அதே நேரம் கேரளம் தவிர மற்றைய எல்லா மாநிலங்களின் தேர்தல் பட்டியல்களும் தயாராக இருக்கின்றன என்றும் ஷேஷன் தெரிவித்தார்.

சட்டப்பேரவைகளுக்கு தகுந்த தருணத்தில் தேர்தல்களை நடத்தவும் தேர்தல் ஆணைக்குழு தயாராக இருக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

## நகர மறுக்கும் வீதித் திருத்தம் 20 யார்; 3 நாளுக்கு மேல்!

(நல்லூர்)

இருபது யார தூரத்துக்கிடையில் கடந்த மூன்று நாட்களாக வீதி திருத்தும் வேலை நடைபெறுகிறது. யாழ். நகரசபைத் தொழிலாளர் வீதி திருத்துகிறார்களோ, அல்லது அப்படிப் பாவனை செய்கிறார்களோ தெரியவில்லை.

சட்டநாதர் நல்லூர் வீதியின் முடிவில் காமாட்சி அம்பாள் மடாலயத்துக்கும் கூட்டுறவுக் கடைக்கும் இடையில் தொழிலாளர் வீதி திருத்தும் வேலையில் காலை தொடங்கி மதியம் வரையும் ஈடுபட்டிருக்கிறார்கள். கல்லும் மண்ணும் வீதியோரத்தில் இருந்தபடியே இருக்கின்றதே ஒழிய வேலை நடந்ததாகத் தெரியவில்லை.

### ஜே. வி. பிக்கோ

பேச்சாளர் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா விடுதலைப் புலிகள் இச்சம்பவத்திற்கு உரிமை கோரினால் சர்வதேச சட்டங்களின்கீழ் நடவடிக்கை எடுக்கப்படலாம் என்பதாலேயே மறுப்புத் தெரிவித்து வருவதாகக் குறிப்பிட்டார்.

### தனிநாட்டுக்

தாம் அண்மையில் ஜெனிவா சென்றபோது அவரைச் சந்தித்ததாகவும், விடுதலைப் புலிகள் இன்னமும் தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிடவில்லை எனத் திலகர் மூலம் அறிந்து கொண்டதாகவும் கூறினார். கொழும்பில் நேற்று நடந்த வாரத்தச் செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட பிரடமன் வீரக்கோன் மேற்படி கருத்துக்களை கூறியுள்ளார்.

### மடு

லங்கா அதிகாரிகளிடம் நடத்திய தீவிர பேச்சுக்களைத் தொடர்ந்து மன்னார் மாவட்டத்தின் மடுதேவாலய பகுதியில் தாக்குதல் நடத்துவதை கைவிடுவதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் இந்தியா தெரிவித்தது.

### இலங்கை

சுதந்திரத்துக்கும் அரசியல் சட்டத்தில் 21வது ஷரத்து உறுதியளித்திருப்பதாக நீதியரசர் பி. என். மிஸ்ராவும், எம். ஜனார்த்தனனும் சென்னையை அடுத்த அகதிமுகாம் ஒன்றில் காவலில் வைக்கப்பட்ட இலங்கைத்தமிழர் ஒருவரை விடுவிக்குமாறு உத்தரவிடுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டனர்.

### விசேட பரீட்சை

திருத்த பரீட்சார்த்திகள் இம்முறை விசேட பரீட்சைக்குத் தோற்றலாம் என்று பரீட்சைப் பகுதி ஆணையாளர் அறிவித்துள்ளார்.

## 'நிலையான ஆட்சி'

**- காங்கிரஸ்**

(டில்லி)

நிலையான ஆட்சி, விலைவாசி உயர்வு, இன்றைய பொருளாதாரச் சிக்கல் ஆகியவையே நமது முக்கிய தேர்தல் பிரச்சினையாக இருக்கும் என்று இந்திரா காங்கிரஸ் கட்சி அறிவித்துள்ளது.

சமூகநீதி, சமயசார்பின்மை, நிலையான ஆட்சி ஆகிய பிரச்சினைகளின் அடிப்படையில் இந்தியாவில் தேர்தல் களத்தில் போட்டி நடைபெறவுள்ளது.

### உள்ளூராட்சி

தினேஷ் குணவர்த்தனாவின் மக்கள் ஐக்கிய முன்னணி, எஸ். டி. பண்டாரநாயக்காவின் முற்போக்கு ஐக்கிய முன்னணி ஆகியவற்றுடன் இது தொடர்பான பேச்சுக்கள் தொடர்கின்றன.

இதனிடையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் போட்டியிடும் வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்கான உட்கட்சித் தேர்தல்களை மாவட்ட வாரியாக ஐக்கிய தேசியக் கட்சி நடத்தவுள்ளது.

### தோம்பூரில்

சென்ற கிளிவெட்டியைச் சேர்ந்த சி. பத்மநாதன் (வயது 23) என்பவர் காணாமல் போயுள்ளார். இவரை இராணுவத்தினர் கைது செய்திருக்கலாம் என்று நம்பப்படுகின்றது.

மேலும் கடந்த முதலாம் திகதி முதல் பத்தாம் திகதி வரை கிளிவெட்டிப் பகுதியில் மூன்று பொதுமக்களைக் கைது செய்தனர். கைது செய்யப்பட்டவர்களில் க. மகேஸ்வரனையும், வேறு ஒருவரையும் 7 ஆம் திகதி முகாமில் வைத்துச் சுட்டுக் கொலை செய்தனர். மற்றவரின் நிலை பற்றி எதுவித தகவலும் இதுவரை தெரியவில்லை.

### வெளியேற்றும்

மான நடவடிக்கைகள் தொடரும் என்றார். கடந்த செவ்வாயன்று வவுனியாவில் கவச வாகனமொன்றின் கீழ் கண்ணிவெடி வெடித்த சம்பவத்தில் நான்கு படையினர் கொல்லப்பட்டதாகவும் கூறினார். பாதுகாப்பு அமைச்சின் கீழ் இரகசியமான படுகொலைப் படைகள் செயற்படுகின்றன என்ற கூற்றை ஜெனரல் சிறில் ரணதுங்கா வன்மையாக மறுத்தார்.

## கொலை முயற்சி சதாமிற்கு காயம்

(டமாஸ்கஸ்)

வளைகுடா யுத்தத்திற்கு முன்னர் நடத்தப்பட்ட பல கொலை முயற்சிகளில் ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைனின் கையில் காயம் ஏற்பட்டுள்ளதாம்.

இந்தத் தகவலை சிரியா அறிவித்துள்ளது. சிரியாவிற்கு சென்ற அகதிகளை மேற்கோள்காட்டி இத்தகவலை சிரியா அறிவித்தது.

### மீனவர்

டைந்தார். படகும் சேதமடைந்தது. தெய்வாதீனமாக மூவரும் படகுடன் கரை சேர்ந்தனர். நேற்று (14 ஆம் திகதி) இச்சம்பவம் இடம் பெற்றது.

### குடும்ப பெண்

நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் மல்லாகத்தைச் சேர்ந்த என். யோகேஸ்வரி (வயது 48) என்ற குடும்பப் பெண்மணி காயமடைந்துள்ளார். (ச) (க)

### அகதிகளுக்

திருப்பி அளித்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

தமிழகத்தில் 250 முகாம்களில் உள்ள 1 22 100 அகதி மக்களுக்காக 17, 250 வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளன என்றும் வேலூர் சிறப்பு முகாமில் இருந்த 670 இலங்கைத் தமிழ் போராளிகளில் 161 பேர் வேலூர் மத்திய சிறைக்கு மாற்றப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

இலங்கையில் சுமுக நிலை திரும்பியதும் அநேகமான மக்கள் தாயகம் திரும்ப விரும்புகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

### முதியவர்

சுட்டு கொலை செய்து, அவரது சடலத்தை கிணற்றுள் வீசி விட்டுச் சென்றுள்ளனர்.

பிந்திக் கிடைத்த செய்தியின்படி இச் சடலத்தை மீட்டெடுத்து வரச் சென்றவர்களில் ஒருவரை காணவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (தி)

## ஈரானின் ஆக்கிரமிப்பையும் அமெரிக்கா எதிர்க்கும்

**-ஜோர்ஜ் புஷ்**

(வாஷிங்டன்)

"ஈராக்கிய பிரதேசத்தை ஈரான் தனது வசம் சேர்த்துக் கொள்வதான எந்தவொரு முயற்சியையும் வாஷிங்டன் எதிர்க்கும்" என அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் அறிவித்துள்ளார்.

ஈராக்கில் உறுதிப்பாடற்ற தன்மை தொடர்ந்து நீடிப்பது குறித்து கவலை வெளியிட்ட ஜோர்ஜ் புஷ் ஈராக்கைக் கைப்பற்றுவதான ஆசையில் நிலைமையைத் தனக்குச் சாதகமாக்கிக் கொள்ள வேண்டாம் என்றும் ஈரானை அவர் எச்சரித்துள்ளார்.

இதேவேளை ஜோர்டானிய மன்னர் குசைன் அமெரிக்காவுடனும் அதன் கூட்டணிநாடுகளுடனும் நல்லுறவை மீண்டும் ஏற்படுத்த விருப்பம் தெரிவித்துள்ளார்.

இவரின் இந்த வேண்டுகோளை ஏற்று பதில் அளிக்கப் போவதாக ஜோர்ஜ் புஷ் தெரிவித்துள்ளார்.

## பி. எல். ஓ. மீதான நம்பிக்கை பூச்சியமாகவே உள்ளது.

**-ஜோர்ஜ் புஷ்**

(வாஷிங்டன்)

'பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் மீதான அமெரிக்காவின் நம்பிக்கை வெறும் பூச்சியமாகத்தான் இருக்கின்றது" என அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் தெரிவித்தார்.

வளைகுடாப் போரில் பாலஸ்தீன விடுதலை இயக்கம் ஈராக் சார்பாக நடந்து கொண்டதையும் அவர் வன்மையாக கண்டித்தார்.

அரபு இஸ்ரேலிய பிரச்சினை பற்றிய விடயத்தில், அமைதி காண்பதற்காக பிரதேச பரிவர்த்தனை செய்து கொள்வதன் அடிப்படையில் அமைந்த ஐ. நா. சபையின் தீர்மானத்திற்கு தாம் ஆதரவு அளிப்பதாகவும் அவர் கூறினார்.

## வங்கித் தரகுப் பணத்தை குறைக்க வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

வடபகுதி மக்களுக்கு உலர் உணவு நிவாரணப் பொருள்கள் கொண்டு வருவதற்கு முன்பே நிவாரணம் வழங்க தமது இருப்பு பொருள்களை பயன்படுத்திய கூட்டுறவு சங்கங்களும், உலர் உணவு நிவாரணப் பொருள்களை ஏற்றி இறக்க பயன்பட்ட லொறிகளுக்கான கூலி, டீசல் செலவுக் கணக்குகளை சமர்ப்பிக்க வேண்டிய கூட்டுறவுச் சங்கங்களும் இந்தக் கணக்கு விபரங்களை சமர்ப்பிக்கும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இவ் வேண்டுகோள் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். மாவட்ட கூட்டுறவு சபைக் கூட்டத்தில் விடுக்கப்பட்டதுடன் ஒரு இலட்சம் ரூபாவுக்கு நானூறு ரூபா வங்கித் தரகுப் பணம் பெற்றுக் கொள்வதை மக்கள் வங்கி குறைத்து விடவேண்டும் எனவும் அங்கு சமூகம் தந்திருந்த மக்கள் வங்கியின் பிரதிநிதியிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

(லோ)

## 2 இலட்சம் ரூபாவுடன் வந்த வயோதிபர் திடீர் மரணம்

(செ. த மை.)

கொழும்பிலிருந்து, 2 லட்சம் ரூபாவுடன் கேரதீவு இறங்குதுறைக்கு வந்துசேர்ந்த பருத்தித்துறை வாசி ஒருவர் திடீர் மரணமானார்.

நேற்று காலை இச்சம்பவம் இடம் பெற்றது. 60 வயது மதிக்கத்தக்க இவர் வெள்ளை வேட்டியும் முழுக்கையளவு சேட்டும் அணிந்திருந்தார். 2 லட்சத்து 1230 ரூபா ரொக்கமும் பார்சல் ஒன்றும் இவரிடமிருக்கக் காணப்பட்டன.

இப்பகுதியில் பாதுகாப்புக் கடமையிலீடுபட்டிருந்த விடுதலைப்புலிகள் இறந்தவரின் சடலத்தையும் உடைமைகளையும் வாகனம் ஒன்றில் எடுத்துச்சென்று சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் பொறுப்பதிகாரியிடம் ஒப்படைத்துள்ளனர். ஆஸ்பத்திரி பிரேத அறையில் இவரின் சடலம் வைக்கப்பட்டுள்ளது. இறந்தவர் சீமாம்பிள்ளை மரியாம்பிள்ளை என தெரிவிக்கப்படுகிறது.


## மரண அறிவித்தல்

### சீமார்பிள்ளை மரியாம்பிள்ளை
(இளைப்பாறிய பாடசாலை அதிபர்)

கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், பருத்தித்துறை தும்பளையை வசிப்பிடமாகக் கொண்டவரும், மேரி மாகிறேட்டின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற சங்கைக்குரிய சகோதரி லோறன்ஸ் அவர்களின் அன்புச் சகோதரரும், அன்ரன் யோகானந்தன், மேரி வசந்தா (லண்டன்), மேரி றஞ்சினி (ஆசிரியை வல்வை மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத்தந்தையும், றஞ்சித்குமார் (லண்டன்), டாக்டர் கலாவதி (கொழும்பு) ஆகியோரின் மாமனாரும், ஞானப்பிரகாசம், மனுவேற்பிள்ளை, கிளாறம்மா ஆகியோரின் மைத்துனரும், எறோன், விவேக், திதுஜா, ஜெசிந்தா செபஸ்தியன், ராஜ்குமார் ஆகியோரின் பேரனுமானார். அன்னாரது நல்லடக்கம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
A. C. ஞானப்பிரகாசம்

(R/1185)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.